பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

23 03 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு பயனடைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. வெங்காய ஏற்றுமதிக்கான 20 சதவீத வரி, வரும் ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி முதல் விலக்கிக்கொள்ளப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஆண்டொன்றுக்கு 15 லட்சம் பேர் வெளிநாடுகளில் இருந்து தமிழகத்திற்கு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. அஇஅதிமுக ஆட்சியில் விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டதாகவும், தற்போதைய திமுக ஆட்சியில் அவை அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு பயனடைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அனைவருக்கும் வங்கிக் கணக்கு திட்டம் மூலம் மாநிலத்தில் 12 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாகவும், 89 லட்சம் குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மானியத்துடன் கூடிய சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 41 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்கள் மருந்தகங்கள் மூலம் பல லட்சம் பேர் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 79 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் 112 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பின்தங்கிய 109 மாவட்டங்களில் வேளாண் உற்பத்திப் பொருட்கள் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் விருப்பத்தின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, அறிவியல் மற்றும் புதுமைத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 333 புதிய ரயில்வே வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 242 வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் வெங்காய உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, ஏற்றுமதிக்கான 20 சதவீத வரி, வரும் ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி முதல் விலக்கிக்கொள்ளப்படுவதாக மத்திய நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தேவைகளைக் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு செப்டம்பர் 13ஆம் தேதி வெங்காய ஏற்றுமதிக்கு 20 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய ரபி பருவத்தில் வெங்காய விளைச்சல் உயர்ந்துள்ளதையடுத்து, வெங்காய வரத்து சந்தையில் அதிகரித்துள்ளது. இதனால் ஏற்றுமதி வரி விலக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஆண்டொன்றுக்கு 15 லட்சம் பேர் வெளிநாடுகளில் இருந்து தமிழகத்திற்கு வருகை தருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள ராமகிருஷ்ண மடத்தின் தரும வைத்தியசாலையின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் மருத்துவ சேவைகளை நாடி வரும் 100 சதவீதம் பேரில் 25 சதவீதம் பேர் தமிழகத்திற்கு வந்து மருத்துவ சேவைகளைப் பெற்றுச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செயல்படுவதை இது எடுத்துக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களைத் தேடி மருத்துவம் என்ற அரசின் திட்டத்திற்கு ஐ.நா.வின் **Inter Agency Task Force** என்ற விருது வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழக அரசு மிகச் சிறப்பான மருத்துவ சிகிச்சைகளை அளித்து வருவதாக திரு. மா. சுப்பிரமணியன் பெருமிதம் தெரிவித்தார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சியில் விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டதாகவும், தற்போதைய திமுக ஆட்சியில் அவை அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே வேலகவுண்டனூர் பகுதியில் தென்னிந்திய அளவிலான 3 நாள் கபடிப் போட்டிகளை அவர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சியில் இளைஞர் நலன் காக்கவும், விளையாட்டில் ஆர்வம் செலுத்தவும் 76 கோடி ரூபாய் செலவில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டங்கள் அனைத்து ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் நடைபெற்றதாகவும், அதை தற்போதுள்ள அரசு கைவிட்டு விட்டதாகவும் கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதாகவும், தற்போது அது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதுபோல விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை திமுக அரசு கைவிட்டுவிட்டதாக அவர் கூறினார்.

<<<<>>>>

உதகை – குன்னூர் இடையே கோடைகால சிறப்பு ரயில் வரும் 28ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 7ஆம் தேதி வரை இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

கோடை விடுமுறை தொடங்க உள்ளதையடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கக்கூடும் என்பதால் கூடுதல் சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே முன்வந்துள்ளது.

வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் குன்னூரில் இருந்து உதகைக்கு காலை மணி 9.40க்கு ஒரு ரயிலும், உதகையில் இருந்து குன்னூருக்கு மாலை மணி 4.45க்கு ஒரு ரயிலும் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்திற்கு ஆண்டுதோறும் 30 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத்தலங்களை கண்டு மகிழ்வதுடன் மலை ரயிலில் பயணிக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

லெபனான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேல் மீது லெபனான் ரா்கெட்டுகளை வீசியதை அடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

-----------

ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் யுக்ரைனைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்ததாக யுக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

-----------

அமெரிக்காவின் நியூமெக்சிகோ பகுதியில் இரு குழுவினருக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 3 பேர் உயிரிழந்தனர். 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

-----------

தில்லி சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் பொதுமக்களிடம் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலோசனைகள் வரப்பெற்றுள்ளதாக தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

-----------

உலகின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இந்தியா உருவாகி வருவதாக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு. சுமன் பெரி தெரிவித்துள்ளார்.

-----------

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அரசுக் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 437 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் வழங்கினார்.

-----------

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி கலந்துகொண்டார்.

-----------

தருமபுரியில் ‘பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’ திட்டம் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

-----------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த திரௌபதி அம்மனுக்கு 15 கிராம மக்கள் சீர்வரிசையுடன் திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 174 ரன் எடுத்தது.

175 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு அணி 16 புள்ளி 2 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 177 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக விராட் கோலி 59 ரன்னும், **Phill Salt** 56 ரன்னும் எடுத்தனர்.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை – மும்பை அணியையும், ஹைதராபாத் - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

--------------

துருக்கியில் நடைபெற்ற உலகக் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் பிரனதி நாயக் வெண்கலப் பதக்கம் வென்றார்.

**Antalya**-வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

-------------

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – போர்ச்சுகலின் **Nuno Borges** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-------------

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கபடிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி 93-37 என்ற புள்ளிக் கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதியாட்டத்திலும் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**